பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 12 | சனிக்கிழமை | 24.02.2024 | கதிர் 109

# இந்தியர்கள் எவரும் இன்றி கச்சதீவில் திருவிழா ஆரம்பம்

## இன்று காலை திருப்பலி ஒப்புக் கொடுப்பு




கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இந்தியர்கள் எவரும் இன்றி நேற்று கொடியேற்றத்துடன் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவைச் சேர்ந்த பலர் நேற்று கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை அலுவலகத்தில் கூடி கட்சியின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்தார்கள். இந்தக் கூட்டம் கட்சியின் பதவி விலகும் தலைவர் மாவை சேனாதிராசாவின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், கட்சிக்க –எதிராக வழக்குத் தாக்கல் செய்தவர்களுடன் சமரசம் பேசி வழக்குகளைக் கைவாங்க வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கென மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இனி இந்தக் குழுவினரே சமரச முயற்சிகளை முன்னெடுப்பர் என்றும் ☞ 2

# நெல்கொள்வனவுக்கு இம்முறை நிதி இல்லை

## கையை விரிக்கிறார் விவசாய அமைச்சர்

இம்முறை பெரும்போக விளைச்சலில் பெறப்பட்ட நெல்லைக் கொள்வனவு செய்ய நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் நிதி இல்லை என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதனாலேயே நெல் கொள்வனவில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆளும் தரப்பு நெல் கொள்வனவில் இருந்து விலகியுள்ளமை ☞ 8

# ரணிலை அவர் வழியிலேயே ஜேவிபி இனித் தோற்கடிக்கும்

## கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் தெரிவிப்பு

தேர்தல்கள் தொடர்பில் ரணில் எந்த முடிவை எடுத்தாலும் அவரை அவரது வழியிலேயே தோற்கடிப்போம் என்று ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் அநுராதபுர மாவட்டத்தின் தலைவருமான வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட்டு பொதுத்தேர்தலை முற்கூட்டியே நடத்தினால் கணிசமான ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கணக்கொன்றைப் போடுகின்றார். ஆனால், பொதுமக்கள் எந்தத் தேர்தலை நடத்தினாலும் அவர் தலைமையிலான ஆளும் தரப்புக்குப் பாடமொன்றைக் கற்றுக் கொடுக்க மக்கள் தயாராக உள்ளனர். அவர்கள் நிச்சயமாக இந்த ஆளும் தரப்பைத் தோற்கடித்து மாற்றத்தினை ஏற்படுத்தவுள்ளனர்.

அதே நேரம், தேர்தல் நடத்தப்படாது மக்கள் ஜனநாயகம் மறுதலிக்கப்படுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி அதற்கும் பதிலளிப்பதற்கு ☞ 2

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கவே நிறைவேற்று முறையை ஒழிக்கும் திட்டம்

## சந்திம வீரக்கொடி எம்.பி. தெரிவிப்பு

தேர்தலை ஒத்திவைப்பதற்காகவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் நாடாளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். ☞ 8

# ராஜபக்சக்களுக்கு மானம் இருந்தால் பொன்சேகாவுடன் அரசியல் செய்யார்

## அவரே தெரிவித்த கருத்து இது

நான் ராஜபக்சக்களுடன் சேர்ந்து அரசியல் செய்யமாட்டேன். அவர்ளுக்கு மானம் இருந்தால் என்னுடன் அரசியல் செய்ய மாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

கட்சித் தலைமையுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

# 'டின்' இலக்கம் தரும் யோசனை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு

வரிப் பதிவின் போது டின் (TIN) இலக்கத்தை வழங்குவது தொடர்பான யோசனையை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்க திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித் தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவு:

வரிப் பதிவின் போது டின் இலக்கத்தை வழங்குவது தொடர்பான யோசனை தற்போது தயாரிக்கப்பட்டுவருகிறது.

6 நிறுவனங்களிடமிருந்து இது தொடர்பான பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. 4 நிறுவனங்களின் பரிந்துரைகள் கிடைத்துள்ளன.

18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்காக எதிர்காலத்தில் தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் போது, அதே இலக்கத்தை டின் இலக்கமாக பயன்படுத்தும் வகையில் யோசனை முன்வைத்து அமைச்சரவைப்பத்திரம் தயாரிக்கப்படுகிறது என்றார்.

# அமெ. பிரதி உதவிச் செயலாளர் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆளும் தரப்பு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அமெரிக்கப் பிரதி உதவிச் செயலாளர் இதனபோது பாராட்டுத் தெரிவித்தார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் உட்பட இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் முக்கிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமெரிக்க பிரதி உதவிச் செயலாளருக்கு ☞ 8

# விருது முறைகேடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

## ஜனாதிபதியின் செயலாளர் விடுத்தார்

சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவ்வாறான கௌரவ நாமங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

குறிப்பிட்ட ஒரு சில நியதிகளின் அடிப்படையில் ☞ 2




# ஜனநாயக முன்னணி செயலர் மறைவு இன்றும் நாளையும் அஞ்சலி நிகழ்வுகள்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக இயக்கத்தின் மூத்த தளபதிகளுள் ஒருவரும் இதன் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் சிரேஷ்ட உபதலைவரும் இஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் செயலாளருமான இராகவன் அல்லது ஆர்.ஆர் (வேலாயுதம் நல்லநாதர்) வியாழக்கிமை இயற்கை எய்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1980ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இணைந்திருந்து - தமிழ் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை முழுமையாக அர்ப்பணித்த ஒரு மூத்த போராளியே ஆர்.ஆர் ஆவார்.

ஆர்.ஆர். இன் வித்துடலுக்கான வணக்க நிகழ்வுகள் -16 ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அறிவிக்கப்பட்டது.

வழக்காளிகளில் ஒருவரான பீற்றர் இளஞ்செழியன் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். எனினும் அவருடன் வழக்கைத் திரும்பப்பெறுவது குறித்து எ-துவும் பேசப்படவில்லை.

-முன்னதாகக்கூட்டம்மாவையர் தலைமையில்தொடங்கியது.முதலில் மாவையரே உரையாற்றினார். அவர், கட்சியின் தலைமைத்தெரிவு உட்பட பல்வேறு விடயங்களில் தான் கூறிய எதனையும் "அவர்கள்" கேட்கவில்லை என்று திரும்பத் திரும்ப குறைப்பட்டார். ஆனால் கடைசிவரை அந்த அவர்கள் யார் என்பது குறித்துத் தெரிவிக்கவேயில்லை.

இதனால் விசனமடைந்த மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் அரிய நேந்திரன், அந்த "அவர்கள் யார்'' என்பதை மாவையர் வெளிப்படுத்த வேண்டும் என்றார். ஆனாலும் மாவையர் அதற்கும் பதிலளிக்கவில்லை. பதிலாக, கூட்டத்தில் அதற்கு மேல் ஜனவரி 21, 27 பொதுக் கூட்டம் குறித்து மீண்டும் பேசுவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. கட்சியின் எதிர்காலம் குறித்தே இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனால் அந்த விடயம் அப்படியே கைவிடப்பட்டது.

இந்த விடயத்தில் கட்சிக்கு இரு தெரிவுகள் மட்டுமே இருக்கின்றன, ஒன்று வழக்காளிகளுடன் சமரசம் பேசி வழக்கை வாபஸ் வாங்க வைப்பது. இரண்டாவது, வழக்கை எதிர்கொள்வது. இதில் எந்தவொன்றுக்கும் நான் சம்மதம். வழக்காளிகளுடன் பேசி வழக்கை வாபஸ்பெறமுடியவில்லைஎன்றால், நீதிமன்றம் கட்டளையிடுமாக இருந்தால் தலைவர் பதவி உட்பட அனைத்துத் தெரிவுகளையும் மீண்டும் நடத்துவதற்கும் நான் உடன்பாடுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

அதுமட்டுன்றி, கடந்த ஜனவரி 21ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற விடயங்களை மீளவும் கதைத்துப் பிரச்சினைகளை பெரிதாக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

இவரைத்தொடர்ந்து, வைத்தியர் சத்தியலிங்கம், சாள்ஸ் நிர்லநாதன் உள்ளிட்டவர்கள்தமதுகருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். வழக்காளிகளுடன் சமரசம் பேசி இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவந்துவிடவேண்டும் என்பதாக அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த நிலையில்இ கட்சியின் புதிய தெரிவுகளுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கானது தனியே எழு பேருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்காக பார்க்ககூடாது அது அதுகட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்காகும்.

ஆகவேகட்சியேஇந்தவிடயத்தில் அதினளவான கவனத்தினை எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் பிரதிவாதிகள் தமது நிலைப்பாடுகளை ஏகோபித்து அறிவித்தால்மட்டுமேவழக்குகளைத் திரும்பப்பெறுவதோ, நீதிமன்றத்தில் சமரசம்செய்துகொள்வதோசாத்தியம் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்

திருணோமலை வழக்கினை கையாள்வது குறித்து விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே, மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ள எழுவரும்முடிவொன்றினைஎடுத்து அறிவிக்கும் பட்சத்திலேயே தான் அடுத்த கட்டம் நோக்கி நகரமுடியும் என்றும் அவர் சுட்டிக்காண்பித்தார்.

இதனையடுத்து வழக்குத் தொடுநர்களுடன் சிவில் அமைப்பின்பிரதிநிதிகள், சமயத்தலைவர்கள், ஆகியோருடன் சமரசப் பேச்சு வார்த்தைகளைமுன்னெடுப்பதற்காக மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வைத்தியர் சத்தியலிங்கம், சரவணபவன் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர் என்று அறிவித்து அந்த முடிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, வழக்குத் தொடுநர்கள் சமரசப் பேச்சக்கு இணங்காதுவிட்டால்நீதிமன்றத்தின் ஊடாகவே விடயங்களை கையாள்வதென்றும் அந்த விடயங்களை ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவே முன்னெடுப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.


இதேநேரம், வைத்தியர் சிவமோகன், எழுந்து ஞானமுத்து ஶ்ரீநேசன்தான்ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டை மீளவும் மாற்றிக் கொண்டிருக்காது விட்டால் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்காது என்று குறிப்பிட்டார். எனினும், முடிந்த விடயங்களை மீளப்பேசுவதால் பயனில்லை என்று தெரிவிக்கப்பட்டு அவ்விடயம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதேநேரம்ஏனையவிடயங்கள் சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக மத்தியசெயற்குழுக்கூட்டம்கூட்டப்படுகின்றபோது அதில் ஆராய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



தொடங்கியது. இன்று அதிகாலை பூசையுடன் முடிவுக்கு வரும். இதில் 4,500 இலங்கையர்கள் பங்கேற்றுள்ளனர்என்றுஅதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையர்கள் மாத்திரமன்றி இந்திய பக்தர்களும் இணைந்து வருடம்தோறும்வெகுவிமர்சையாக இடம்பெறும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நடைபெறுவதே வழமை. இரு நாட்டு அருட் தந்தையர்களும் இணைந்தே திருப்பலியையும் ஒப்புக்கொடுப்பர். ஆனால் இம்முறை இலங்கையர்களின் தனிப் பங்கேற்புடன் மட்டுமே திருவிழா இடம்பெற்றது.

நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாவில் சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இன்று இடம்பெற்றன.

வருடாந்த திருவிழா திருப்பலி நிகழ்வு நாளை காலை 7 மணிக்கு யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

இத்திருவிழாவிற்கு இலங்கையில் இருந்து 4354 பக்தர்கள் கலந்து கொண்டுள்ளனர் .இந்தியத் தரப்பிலிருந்து ஒருவர்கூடப் பங்கேற்ககவில்லை.. எல்லைமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி இந்தியர்கள் எவரும் திரிவிழாவில் பங்கேற்கவில்லை.

.இத்திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்துஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன கடற்படையினர் ஊடாகயாழ். மாவட்டச்செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நேற்றைய திருவிழாவில் கடற்படை உயர் அதிகாரிகள் ஜனாதிபதியின் செயலாளர்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

## விருது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய செயன்முறைக்கமைய தெரிவு செய்யப்படும் சிறப்புக்குரிய இலங்கை பிரஜைகளுக்காக ஜனாதிபதியால் வழங்கப்படும் விருதுகள் மற்றும் கௌரவ நாமங்களுக்காகபயன்படுத்தப்படும் பெயர்களை பயன்படுத்தி சில நபர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விருதுகள் மற்றும் சன்னஸ் பத்திரங்கள், சான்றிதழ்கள்வழங்கப்படுகின்றமை ஜனாதிபதி அலுவலகத்திற்கு தெரியவந்துள்ளது.

அதனால்தேசியவிருதுகளுக்காக பயன்படுத்தப்படும் கௌரவ நாமங்களை வேறு தரப்பினர் தவறாக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், முறையற்றவிதத்தில்வழங்கப்படும் விருதுகள்காரணமாகஇதுவரையில் இலங்கையில் கௌரவிப்புக்கு பாத்திரமானவர்களுக்கு செய்யும் அநீதியாகவும் அவமரியாதையாகவும்அமைவதாகஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறான செற்பாடுகளுக்கு எதிராகஉடனடியாகசட்டநடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

1986ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதியால் 387/3 மற்றும் 1986.02.03 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் தேசிய விருகள் அறிமுகப்பட்டத்தப்பட்டன. பின்னர் 627/8 மற்றும் 1990.-09.-12 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்திரம்இ 863/4 மற்றும் 1995-.03.-20 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்திரம், 1535ஃ12 மற்றும் 2008-02-08 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்திரத்தின் ஊடாக தேசிய விருது வழங்கும் செயன்முறைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் 18.-02.-2023 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட ஊஹறீ/ஹிஎீ/புஎீம்/95/2023 இலக்க அமைச்சரவைக் குறிப்பு மூலம், 'விசிஷ்ட கௌசல்யாபிமானி' மற்றும் 'விசிஷ்ட ஜனரஜ அபிமானி' ஆகிய இரண்டு புதிய விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மாகாண ஆளுநர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் ஊடாக தேசிய விருதுகளுக்கான பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்படுவதோடு, ஜனாதிபதியினால் பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்காக சிறந்த சேவை ஆற்றிய, இலங்கையர்கள் மற்றும் இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகளை வழங்குவதற்கானதெரிவுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தேசிய விருதுகளை பெற விரும்பும் தகுதியுள்ள இலங்கையர்களிடமிருந்துவிண்ணப்பங்களைக் கோருவதற்கான புதிய முறைமை ஒன்றை தயாரிப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்களைக் கொண்ட தேர்வுக் குழுவால் விருது பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட விருது பெற்றவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, குறிப்பிட்ட திகதியில் ஜனாதிபதிதலைமையில் விருதுகள் வழங்கப்படும்.

சுதந்திர தினம், நினைவு தினம் தேசிய வீரர்கள் தினம் உட்பட விருதுகள் வழங்கப்படுவதற்கு பொருத்தமான திகதிகளை ஜனாதிபதிக்குதீர்மானிக்க முடியும். மேலும், இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படும்.

## ராஜபக்சக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கும் கட்சிக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றம்பெற்றுள்ளன. அதனை கட்சியில் உள்ள வர்கள் தான் தோற்றுவித்துள்ளார்கள். அவ்வாறான முரண் பாடுகளுடன் தேர்தலுக்கு முகங்கொடுப் பதென்பது மிகவும் கடினமானதொரு பணியாகும்.

அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றபோது இன்னொருவருக்கு கூஜாதூக்குபவர்களாகச் செயற்பட முடியாது. எழுந்திருக்குமாறு சொல்லும்போது எழுந்திருக்கவும், அமருமாறு கூறும்போது அமரவும் நான் தயாரில்லை. ஒருவர்இருவர்எடுக்கும் தீர்மானங்களுக்கு மௌனமாக செவிமடுத்துச் செயற்படுவதற்கும் நான் தயாரில்லை.

அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதாக இருந்தால் ஜனநாயகம் இருக்க வேண்டும். வாயிலிருந்து வெளிவரும் சொற்கள் மிகவும் அவதானமனதாக இருக்க வேண்டும்.மக்களின்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அரசியல் தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு நான் தயங்கப் போவதில்லை.

நான் ராஜபக்சக்களுடன் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்கப்போவதில்லை. ராஜபக்சகளுக்கு மானம் இருக்குமாக இருந்தால் அவர்கள் என்னுடன் அரசியல் செய்யமாட்டார்கள் என்றார்.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராகவே உள்ளது.

அதுமட்டுமன்றி ரணில் எந்தவழியில் முடிவுகளை எடுத்தாலும் அதேவழியில் அவரை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். அவ்வாறில்லாது விட்டால் நாட்டு மக்களுடன் நாம் வீதியில் இறங்கி அவரை வெளியேற்றுவோம்.

மேலும், அடுத்து எந்த தேர்தல் நடைபெற்றாலும் அதில் வெற்றிபெறும் நிலையிலேயே தேசிய மக்கள் சக்த ஶ்ரீஉள்ளது என்பது தான் களநிலைமையாகும் என்றார்.

# இலங்கையைக் காப்பாற்ற அனைத்தையும் செய்வோம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

நாட்டை பாதுகாக்க முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். அதுதான் எங்களது ஒரே எதிர்பார்ப்பு எங்களுக்கும் ஜனாதிபதிக்கும் வேறு எந்த மறைமுக நிகழ்சி நிரல் இல்லை மக்களுக்கு தெரிவிக்க முடியாத எந்த நிகழ்ச்சி நிரலும் எங்களிடம் இல்லை என்று தொழில் மற்றும்வெளிநாட்டுவேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

'இலங்கையை வெற்றி கொள்வோம்' மக்கள் நடமாடும் சேவை திட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்று கேகாலையில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டுஉரையாற்றிய தெரிவிக்கையில்,

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த18மாதங்களில்8பில்லியன் டொலருக்கும் அதிக பணத்தை அனுப்ப வெளிநாடுகளில் தொழில் புரிந்துவரும் இலங்கையர்கள் நடவடிக்கைஎடுத்துள்ளனர். அவர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். அதனால் வெளி நாட்டு தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு தேசத்தின் மரியாதை உரித்தாக வேண்டும்

தற்போது எல்லா இடங்களிலும் அனைவரும் எவ்வாறான கட்சி, நிறம் சேர்ந்து கூட்டணி அமைத்துக்கொண்டு கூக்குரல் இட்டாலும்இந்தநாடுநாட்டில்இரண்டு முகாம்களே இருக்கின்றன. அதில் ஒன்றுதான் எம்மை பலவந்தமாக இழுத்துப்போட்டிருக்கும்படுகுழியில் இருந்து வெளியேற உண்மையாக நடைமுறையில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற முகாம் மற்றது, அந்த நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதென தெரிவித்து பொய்யாக கூச்சலிட்டுக்கொண்டு வெளிநாட்டு சக்திகளிடம் பலியாகி இந்த நாட்டை மேலும் பாதாளத்துக்கும் நெருக்கடிக்கும் இழுத்துச் செல்லும் முகாமாகும்.

தற்போது நாடு முழுவதும் விழா போன்று மக்கள் சந்திப்பு கூட்டங்களை நடத்திக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளுக்க காலை வாரும் பிரிவினரும் இருக்கின்றனர். இவர்கள் இன்று தெரிவித்த விடயங்களை மக்கள் மறக்க மாட்டார்கள். ஜனாதிபதி சீனாவிடம் பணம் பெற்றே தேர்தலுக்கு பதாதைகள் சுவரொட்டிகள் அடிப்பதாக இற்றைக்கு 10வருடங்களுக்குமுன்னர்இவர்கள் தெரிவித்திருந்தார்கள். அப்படியானால் இவர்கள் இந்தளவு பதாதை, சுவரொட்டிகளை தொங்கவிடுவது யாரிடமிருந்து பணம் பெற்று என கேட்கிறோம். நாட்டு மக்களுக்கு இதற்கு பதிலளிக்க வேண்டும். நாட்டு மக்களும் இது தொடர்பாக இவர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டும்.

மேலும் நாடு வீழ்ச்சியந்தபோது நாட்டை பாஜறுப்பேற்று அதனை பாதுகாக்க முன்வராமல் ஓடியவர்கள் யார். ஆனால் நாங்கள் நாடு நெருப்பெடுக்கும்போது பின்வாங்காமல் அதனைப் பாதுகாக்க எங்களால் முடிந்த நடவடிக்கையை மேற்கொள்வோம். எமது நாட்டை பாதுகாக்க எங்களால் முடிந்த விடயங்களை நாங்கள் மேற்கொள்வோம். நாட்டை பாதுகாக்க முன்வந்தவர்கள் யார் என்பது நாட்டு மக்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நாங்களும் எமது ஜனாதிபதியும் எங்களை பாதுகாத்துக்கொள்ள தப்பிச்செல்ல வில்லை.

நாட்டை பாதுகாக்க முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். அதுதான் எங்களது ஒரே எதிர்பார்ப்பு எங்களுக்கும் ஜனாதிபதிக்கும் வேறு எந்த மறைமுக நிகழ்சி நிரல் இல்லை மக்களுக்கு தெரிவிக்க முடியாத எந்த நிகழ்ச்சி நிரலும் எங்களிடம் இல்லை.

சமூகவலைத்தளங்களைஅடக்கி, மக்களுக்கு மறைக்க எந்த நிகழ்ச்சி நிரலும் எங்களுக்கு இல்லை. நாங்கள் சிங்களம், தமிழ், முஸ்லிம் என பிரித்த எல்லா சந்தர்ப்பத்திலும் எமது நாடு பாதாலத்துக்குள் விழுந்தது. எங்களை மதத்தால் பிரித்தார்கள். இனத்தால் பிரித்தார்கள். அந்த சந்தர்ப்பங்களில் நாங்கள் விழுந்தோம். அதனால் இன,மத பேதங்களை ஒதுக்கிவிட்டு நாங்கள் ஒன்றுபட்டால் இலங்கையை வெற்றிகொள்வோம்என்பதுகனவாகப் போவதில்லை என்றார்.

### தேர்தல் பணிகளுக்காக

# பஸில் விரைவில் நாடு திரும்புகிறார்

தேர்தல் பணிகளுக்காக பஸல் ராஜபக்ச விரைவில் நாடு திரும்பவுள்ளார் என்று ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்கவீரதுங்கதெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும்,சிங்கள,தமிழ்புதுவருடத்துக்குப் பின்னர் நடைபெறும் பொதுத் தேர்தல் குறித்து செயற்படுவதற்காக புத்திசாதுரியமான பசில் ராஜபக்ச விரைவில் நாட்டுக்கு வருகை தரவுள்ளார்.

அவர், வருகை தந்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகப் பதவியில் அமர்த்துவதற்காகவோ அல்லது அதிகாரத்தை வழங்குவதற்காகவோ அன்றி பொது ஜன பெரமுனவைவெற்றிபெறச்செய்வதற்காகவோ செயற்படவுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறை மாவட்ட செயலாளரால் பிரதேச செயலருக்கு கௌரவிப்பு



(சர்ஜ/ன் லாபீர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணத்தில் உருவான உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அரச காணிகளை நிபந்தனையற்ற ரீதியில் சுதந்திரமான முறையில் பூரண உரிமையாக அளிப்பு வழங்கும் நிகழ்வு அண்மையில் தம்புள்ளையில் இடம்பெற்றது.

இதில் அகில இலங்கை ரீதியாக சம்மாந்துறை பிரதேசம் முதலிடம் பெற்றது.

உருமய பூரண உறுதி அளிப்பு திட்டத்தில் சம்மாந்துறையில் இருந்து இலங்கையிலே ஆக கூடுதலாக(711) பொதுமக்களுக்கு முதல் முறையாக பூரண உறுதி அளிப்புகள் வழங்கப்பட்டன.

இது பிரதேச ரீதியாக அகில இலங்கை ரீதியில் ஆகக் கூடுதலான பூரண உறுதி அளிப்பாக காணப்படுகின்றது. இத் திட்டத்தில் நாடு ரீதியாக முதல் உறுதி அளிப்பு சம்மாந்துறை பிரதேசத்தில் உடங்கா-01 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த எம்.டி குழந்தை உம்மா என்பவருக்கு ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக முதன்முதலாக சம்மாந்துறை பிரதேச செயலகத்திலிருந்து நில அளவை திணைக்களத்தின் ஊடாக வரைபடம் அனுப்பிவைக்கப்பட்டதால் குறித்த பயனாளி முதல் தெரிவில் உள்வாங்கப்பட்டமைக்கான காரணமாக அமைகின்றது.

இந்த விடயத்தைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவால் கடந்த புதன்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலக ஊழியர் நலனோம்பல் அமைப்பால் நடத்தப்பட்ட நிகழ்வின் போது வைத்து மெச்சுறை பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் இந் நிகழ்வில் மாவட்ட செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் இதுவரை அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களுக்குள் முன்மாதிரியாகவும் எவ்விதமான முறைப்பாடுகளுமற்ற, மூவின மக்களையும் இணைத்து நேர்மையான முறையில் சேவையாற்றுகின்ற செயற்றிறன் மிக்க பிரதேச செயலாளர் என்றால் அது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா என்று குறிப்பிட்டார்.

அத்தோடு கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி அனீஸ்,பிரதம கணக்காளர் ஏ.எல்.ஆதம்பாவா,பிரதம பொறியியலாளர் ஏ.பி சாஹீர்,மாவட்ட உள்ளக பிரதம கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், பிரதி,உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள்,கணக்காளர்கள்

சம்மாந்துறை பிரதேச திணைக்களங்களின் தலைவர்கள் காரியாலய உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(05)

# அஸ்-ஸ/ஹறயா பாடசாலை வித்தியாரம்ப விழா நிகழ்வு





(பாறுக் ஷிஹான்)

2024 ஆம் ஆண்டு தரம் 01 மாணவர்களை கல்முனை அஸ்-ஸ/ஹறா பாடசாலைக்கு உள்வாங்கும் வித்தியாரம்ப விழா வியாழக்கிழமை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி ஏனைய அதிதிகளாக ஈ.பி.எஸ்.ஐ இணைப்பாளர் ஏ.றாசிக் உதவி அதிபர்களான எஸ்.ஜ/னைதீன் எம்.ஏ.எப் .மிஸ்னா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள்,அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம். ரி.எம் அனப் ,உறுப்பினர்களான ரி.எம். இர்பான்,எம்.ஜெ.எம் ஜெசில், எம்.எம்.எம்.ஜௌபர், எம். எம் சமீறுல்லாஹி, ஐ.ஹசீனா பானு , எல்.எம் சர்ஜ/ன் ,ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் மிகக் குறுகிய காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப் பட்டு மிகச்சிறப்பாக நடைபெற்று முடிவடைந்தது.

இறுதியாக ஏடு துவங்கும் நிகழ்வுடன் அன்பளிப்புகள் பழைய மாணவர் எம்.எம்.எம்.ஸ முஹ்சீனின் அனுசரனையுடன் இடம்பெற்றதோடு சியானுதீன் (ஹாசிமி) அவர்களின் துஆ பிரார்த்தனையுடன் இடம்பெற்றது. பிரதம அதிதி, கௌரவ அதிதிகள், விஷேட அதிதிகள் அனைவரும் ஆசிரியர்களுக்கான கௌரவிப்புகளையும் பாராட்டுக்களையும் வழங்கினர்.

அத்துடன் மாணவர் கலை நிகழ்வுகளுடன் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)





# 2025 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் கலை வர்த்தக மாணவருக்கு வரவேற்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் 2025 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் உயர்தர கலை, வர்த்தகப் பிரிவு மாணவிகளை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு 2024 உயர்தர சிரேஷ்ட மாணவிகளின் ஏற்பாட்டில் கல்லூரியின் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இந்தப் பிராந்தியத்தின் கல்வித்துறையில் சாதித்துக் காட்டிய இரண்டு பெண் சாதனையாளர்கள் வளவாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கல்வி கற்றுக் கல்லூரியிலே ஆசிரியையாகப் பணிபுரிந்து கல்லூரியில் இருந்தவாறே கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தி பெற்று கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட சாய்ந்தமருதின் முதலாவது பெண் கல்வி நிர்வாக சேவை அதிகாரியும் சில காலம் உதவிக் கல்வி பணிப்பாளராகவும் சில காலம் கல்முனைக் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் பணிபுரிந்து தற்போது இந்தப் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்று, பாடசாலையின் ஒவ்வொரு துறையும் முறையாக வடிவமைத்து செப்பனிட்டுக் கொண்டிருக்கும் கல்லூரியின் அதிபர் ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் அவர்களும் மற்றுமொரு வளவாளராக இப்பிராந்தியத்தில் பிரபலமான பெண் ஆய்வாளர், எழுத்தாளர், பன்னூல் ஆசிரியர், உளவளத்துறை எழுத்தாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கை பீடத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம். வை. மின்னதுல் ஹிரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

உயர்தர கலை வர்த்தகப் பிரிவில் இணைத்துக்கொள்ளப்பட்ட சுமார் நூற்றியெண்பது (180) மாணவிகளுக்கு ஆலோசனை வழிகாட்டல் பயிற்சிகள் வழங்கப்பட்டமை இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

மாணவிகள் எதிர்நோக்குகின்ற கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகள், பருவ கால பிரச்சனைகள், எதிர்காலத்தை திட்டமிடுதல், இலக்குகளை வடிவமைத்தல், இலக்குகளை நோக்கி நகர்தல், அதில் உள்ள சவால்கள் வெற்றி கொள்ளல் மாணவிகளுக்கு முன்னுள்ள சவால்கள் அவற்றை எதிர்கொள்ளும் நுட்ப முறை என மாணவிகளுக்கு முழுமையாக பயன்படக்கூடிய வகையில் செயல்முறை பயிற்சி மூலமும் விரிவுரையின் மூலமும் அம் மாணவர்களுக்கு பல தெளிவூட்டல்களை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்த கலை, வர்த்தகப் பிரிவு ஒன்றிணைக்கப்பட்டு அதன் புதிய பகுதி தலைவியாக சிரேஷ்ட ஆசிரியை மௌலவியா ஐ.எல்.எம். ஏச்.எஸ். ஹிதாயா அவர்கள் அதிபர் அவர்களால் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர்களான எம்.எஸ் மனூனா,

என்.டி நதீகா, பகுதித்தலைவர்கள், உயர்தர பிரிவு ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(05)

# பிராந்திய ஊடகவியலாளர்களுக்காக மட்டு. நகரத்தில் விசேட செயலமர்வு

(உமர் அறபாத் - ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெஸ்டினா முரளிதரனின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ், அருவி பெண்கள் அமைப்பின் அனுசரணையில் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்துள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான விசேட ஊடக செயலமர்வு கடந்த வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த விசேட செயலமர்வில் சிரேஷ்ட சட்டத்தரணியும் சமூக செயற்பாட்டாளருமான திருமதி மயூரி ஜனன் கலந்துகொண்டு நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய செய்தியாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு நிகழ்நிலைக் காப்புச்சட்டம் குறித்த தெளிவைப் பெற்றுக்கொண்டனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உடன்படிக்கைகளின் நன்மைகள்

பொருளாதார மீட்சிக்கான வழிகளில் ஒன்றாக மற்றைய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதையும் ரணிலின் ஆளும் தரப்பு தொடர்ந்து மேற்கொள்கின்றது. அண்மையில் தாய்லாந்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இந்தியாவுடன் 'எட்கா' ஒப்பந்தம் செய்யப்படப்போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா, பங்களாதேஷ் மற்றும் சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் பேச்சு நடைபெற்று வரும் நிலையில், இந்தோனேசியாமற்றும்மலேசியாவுடனானவர்த்தகபேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்க உள்ளன. பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் (RCEP) அங்கத்துவம் பெறுவதற்கான விருப்பக் கடிதத்தை இலங்கை சமர்ப்பித்துள்ளது.

இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கெய்துகொள்வதற்கு நாட்டில் மீண்டும் எதிர்ப்புக் கிளம்பத் தொடங்கியுள்ளது. 1977 இல் மாற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளால் உடனடியாக இலங்கைக்குச் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டாலும், அதன் பிரதி பலன்கள்எதிர்பார்த்தளவில்லைஇல்லைஎன்பதைஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் இந்த நாட்டில் ஆயுதக் கிளர்ச்சிகளையும் தோற்றுவித்திருந்தது.

இந்தியாவுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் உள்ளூர் தொழிலாளர்களுக்குப் பாதகமாக இந்தியத் தொழிலாளர்கள் இந்த நாட்டை வெள்ளத்தில் மூழ்கடிப்பார்கள் என்பது அதனை எதிர்ப்பவர்களின் வாதங்களில் இயங்கும் பொதுவான நூலிழை. மலிவான 'தாழ்வான' இந்தியப் பொருட்களைக் கொட்டும் இடமாக இலங்கை மாறும். இந்தியாவில் படித்த மாணவர்கள் சர்வதேசத் தரத்தை எட்டுவதில்லை போன்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது. இன்றைய பொருளாதார ஜாம்பவான்களான சீனா மற்றும்அமெரிக்காஆகியஇருநாடுகளுக்கும்இந்தியாஇன்றுசவாலாக உள்ளது. இந்திய படித்த வல்லுநர்கள் சிலிக்கான் பள்ளத்தாக்கில் (உயர் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையம்) முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்திய விஞ்ஞானிகள் இந்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிலவுக்கும் அதற்கு அப்பாலும் ராக்கெட்டுகளை அனுப்புகிறார்கள். உலக சுகாதார நிறுவனம் போன்ற பொறுப்புள்ள மருத்துவ நிறுவனங்களால் இந்திய மருந்துகள் பரவலாக விரும்பப்படுகின்றன. எனவே இந்தியா பற்றிய கொள்கைகளை இலங்கையர்கள் மாற்றிக்கொள்ளவேண்டிய தருணம் இது.

எங்கள் சிறிய தீவில், எங்களால் இன்னும் தரமான முகச் சவர 'பிளேட்டை' தயாரிக்க முடியவில்லை, ஆனால், இந்தியப் பொருட்கள் தரமற்றவை என்று குறைசொல்கின்றோம்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் நமது பொருளாதாரத்தை மேம்படுத்த மந்திரம் இல்லை. ஆனால், குறைந்த தொழில்நுட்ப உற்பத்திப் பொருட்கள் மற்றும் முதன்மைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் இருந்து விலகி மின்னியல் பெருட்கள், இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் போன்ற மிகவும் சிக்கலான உயர் தொழில்நுட்பப் பொருட்களுக்கு மாறவும், அதன் மூலம் நமது அந்நியச் செலாவணி ஈட்டும் திறனை அதிகரிக்கவும் அவை வாய்ப்பளிக்கின்றன.

பெரிய வர்த்தக வலைப் பின்னல்கள் மற்றும் பங்குதாரர் நாடுகளிலிருந்து இடைநிலை பொருட்களின் மலிவான இறக்குமதிகள் மூலமும் அதன் ஆதார பங்குதாரர்களை பல்வகைப்படுத்துவதன் மூலமும் எங்கள் ஏற்றுமதி போட்டித்தன்மையை அதிகரிக்க இத்தகைய ஒப்பந்தங்கள் உதவுகின்றன.

எடுத்துக்காட்டாக, வியட்நாம் செய்துகொண்ட இதுபோன்ற வர்த்தக உடன்படிக்கைகள், வியட்நாமின் வர்த்தக ஒருங்கிணைப்பு பங்காளிகளைஆசியாவிற்குஅப்பால்விரிவுபடுத்துகின்றன, இதனால் ஆசியான் பொருளாதார சமூகம் (AEC) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் அமெரிக்காவுடனான குறைக்கப்பட்ட கட்டணங்களை அந்த நாடு பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கிறது. இலங்கைக்கும் இதுபோன்ற வாய்ப்புகள் உருவாகும்.

நமது நாடு அதன் வெளி கடனாளிகளுக்கு இன்னும் கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டியதாக, மேலும் இந்தக் கடன் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. செப்டம்பர் 2023 இல், நமது வெளிநாட்டுக் கடன் 52.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. அதனைச் செலுத்துவது என்றால் நாம் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். அதற்கு முதலீடுகள் வேண்டும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் அதற்கான சூலை உருவாக்கும்.

இந்த கடன் சூழ்நிலையில் இருந்து நாம் மீள்வதற்கு நாம் உழைக்க வேண்டும். சர்வதேச நாணய நிதியம் உட்பட பலதரப்பு கடன் வழங்குபவர்களின் கடன்களின் உதவியால் 2023 டிசம்பரில் இலங்கையின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 829 பில்லியன் ரூபாவால், அதாவது 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக பொருளாதாரம் அடுத்த புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

எளிமையான மொழியில் சொன்னால், எங்களின் தற்போதைய ஏற்றுமதி வருவாய், எங்களின் கடனாளிகளுக்கு எந்த நேரத்திலும் திருப்பிச் செலுத்த போதுமானதாக இல்லை. எனவே, திருப்பிச் செலுத்தும் காலக்கெடுவைச் சந்திப்பது மட்டுமல்லாமல், மீண்டும் திவாலாகிவிடாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கான வழிகளையும் வழிகளையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் அதற்கான ஒரு சாத்தியமான வழி. வியட்நாமிய அனுபவம் இதை நிரூபிக்கிறது. நீண்ட காலமாக நிலவி வந்த, காலாவதியான தப்பெண்ணங்களை அகற்றி, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டிய நேரம் இது.

# ஒல்லியாக இருப்பது ஏன்?



**கு.கணேசன்**

குழந்தையானாலும் சரி, இளம்பருவத்தில் இருந்தாலும் சரி வயதிற்கு ஏற்ப உடல் வளர்ச்சி இருந்தால்தான் நாம் ஆரோக்கியமாக இருக்கிறோம் என்று பொருள். நம்மில் பல பேர் இயற்கையாகவே ஒல்லியாக இருப்பதைக் காணலாம். குண்டாக இருப்பவர்கள் உடல் இளைக்க விரும்புவதைப் போலவே ஒல்லியாக இருப்பவர்கள் சதைப்பிடிப்போடு இருக்க மாட்டோமா என்று ஏங்குவதும் இயல்பு.



### ஒல்லியாக இருக்க என்ன காரணம்?

பொதுவாக உடல்வாகு என்பது அவரவர் பரம்பரையைப் பொறுத்தது. அப்பா, அம்மா ஒல்லியாக இருந்தால் அவர்களின் வாரிசுகளும் ஒல்லியாக இருக்க அதிக வாய்ப்புண்டு. இப்படிப் பரம்பரை காரணமாக ஒல்லியாக இருப்பவர்களுக்கு ஆரோக்கியத்தில் எந்தக் குறையும் இருக்காது. ஆகவே, இவர்கள் 'உடல் ஒல்லியாக உள்ளதே' என்று கவலைப்படத் தேவையில்லை.

சத்துக் குறைவு காரணமாக உடல் ஒல்லியாக இருப்பவர்கள்தான் நம்மிடம் அதிகம். வறுமையோடு போராடும் ஏழைகளுக்குத் தினமும் பால், பழம், முட்டை, மீன் இறைச்சி போன்ற சத்துள்ள உணவுகள் கிடைப்பது அரிது. இதனால், சத்துக் குறைவு நோய்கள் இவர்களை எளிதில் ஆக்கிரமித்துக்கொள்ளும். அப்போது இவர்கள் ஒல்லியாக இருப்பார்கள்.

### தவறான உணவுப் பழக்கம்

சிலர் எந்த நேரமும் சாக்லெட், மிட்டாய், பிஸ்கட், சூயிங்கம், அரிசி என்று எதையாவது ஒன்றை வாயில் மென்றுகொண்டே இருப்பார்கள். பசிக்கின்ற நேரத்தில் இதுபோன்று தின்பண்டங்களைத் தின்று வயிற்றை நிரப்பிக்கொள்வதால், அவர்களுக்குத் தேவைப்படுகின்ற சத்துள்ள காய்கறி, கீரை, பழம் போன்ற உணவுகளைச் சாப்பிடுவது குறைந்துவிடும் இந்த மாதிரியான உணவுப்பழக்கம் நாளடைவில் உடல் மெலிவுக்குக் காரணமாகிவிடும்.

### நோய்களும் காரணமாகலாம்!

நன்றாக உடல் வளர்ச்சி பெற்றுவரும் ஒருவர் திடீரென்று மெலிய ஆரம்பித்தால், அதற்கு உடலில் தோன்றியுள்ள நோய்தான் காரணமாக இருக்க முடியும். குறிப்பாக, காசநோய், சர்க்கரை நோய், கல்லீரல் நோய், சவலை நோய், சிறுநீரக நோய், மனநோய், குடல் புழுக்கள், அஜீரணம் என்று பெரிய பட்டியலே போடலாம். ஒல்லியாக உள்ளவர்கள் முதலில் அதற்குக் காரணம் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கேற்ப மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் உடலைப் புஸ்டியாக்க முடியும்.

### கலோரிகளைக் கணக்கிடுங்கள்

உடல் வளர்ச்சி சரியாக இருக்க வேண்டுமானால், சரியான கலோரி அளவுள்ள உணவைச் சாப்பிட வேண்டியது முக்கியம் இதற்கு ஓர் உணவியல் நிபுணருடன் கலந்து உங்களுக்குத் தேவையான கலோரிகளைக் கணக்கிடுங்கள். பொதுவாக, நாள் ஒன்றுக்கு ஆணுக்கு 2,200 கலோரிகளும் பெண்ணுக்கு 1,800 கலோரிகளும் தேவை. ஒல்லியாக இருப்பவர்கள் மட்டும் 1000 கலோரிகள் தருகின்ற உணவை அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

### உடலை வளர்க்கும் புரதம்!

உடலின் சீரான வளர்ச்சிக்குப் புரதச் சத்துதான் மிகவும் உதவுகிறது. உடலில் செல்கள் உருவாவதற்கும், அவை வளர்ச்சி அடைவதற்கும் புரதச் சத்து அவசியம். தசைகள் வலுவடைவதற்கும், பொலிவு பெறுவதற்கும் புரத உணவு மிக அவசியம். உடலில் ஏற்படும் காயங்களும் புண்களும் விரைவில் குணமாவதற்குப் புரதம் இருந்தால்தான் முடியும். உடலில் ஹார்மோன்கள், என்சைம்கள், செரிமானநீர்கள் போன்றவை சீராகச் சுரப்பதற்கும் புரதம் தேவை. வயது, வேலையின் தன்மை, உடற்பயிற்சி, விளையாட்டு போன்றவற்றைப் பொறுத்து ஒருவருக்கு நாளொன்றுக்கு 50லிருந்து 75 கிராம் வரை புரதம் தேவைப்படும்.

### புரதம் நிறைந்த உணவுகள்

பால் மற்றும் பாலில் தயாரிக்கப்பட்ட தயிர், நெய், வெண்ணெய், பால்கோவா, பாலாடைக் கட்டி போன்றவற்றில் புரதம் மிகுந்துள்ளது. இவற்றை அதிகமாகச் சாப்பிடலாம். முட்டை, மீன், இறைச்சி, காளான், நிலக்கடலை, சோயா, பருப்பு, முந்திரிப் பருப்பு, பச்சைப் பட்டாணி, பீன்ஸ், அவரை, துவரை, உளுந்து, மொச்சை, சுண்டல், முளைக்கட்டிய பயறுகள் போன்றவை புரதம் நிறைந்த உணவுகளாகும். அரிசி, கோதுமை, சோளம் போன்ற தானியங்களிலும் ஓரளவு புரதம் உள்ளது.

### அமினோ அமிலங்கள் தெரியுமா?

புரதம் என்பது அமினோ அமிலங்களால் உருவாக்கப்படுகின்றன. மொத்தம் 20 அமினோ அமிலங்கள் உள்ளன. இவற்றில் பன்னிரண்டு அமினோ அமிலங்களை மாவுச்சத்து மற்றும் தாதுச்சத்துகளிருந்து நம் உடலே தயாரித்துக்கொள்ளும். ஆனால், எட்டு அமினோ அமிலங்களை மட்டும் நம் உடலால் தயாரிக்க முடியாது. அவற்றை நாம் சாப்பிடும் உணவிலிருந்துதான் பெற வேண்டும். இவற்றை 'அத்தியாவசியமான அமினோ அமிலங்கள்' (Essential amino acids) என்கிறோம்.

### கலவை உணவைச் சாப்பிடுவீர்!

நமக்குத் தேவையான அமினோ அமிலங்களைப்

(5ஆம் பக்கம் பார்க்க..)



## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நூலகக் கற்றல் வள நிலையம் திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

'ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' எனும் கூற்றுக்கமைய புனரமைக்கப்பட்ட

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) நூலகமானது 'அறிவுத்தேடலுக்கு முதலிடம்' எனும் தொனிப்பொருளில் கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் மிக சிறப்பான நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எம்.எச். எம். ஜாபீர், கௌரவ அதிதியாக அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் நீண்ட கால தேவையாகக் காணப்பட்ட நூலக புனரமைப்பு, நூலக நிருவாக கட்டமைப்பு, அழகு, அபிவிருத்தி, மேலதிக தேடல், நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பசாவல்களை மாணவிகள் முகம்கொடுக்கும் வகையில் கணினி மயப்படுத்தப்பட்ட நூலகம் போன்ற இதர தேவைகளை நூலக பொறுப்பாளர் அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்த போது அதற்கான பூரண ஒத்துழைப்புகளை வழங்கி நூலக கற்றல் வள நிலையம் திறந்து வைக்கப்பட்டமை இக்கல்லூரியின் வரலாற்றின் முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகின்றது.

நூலக வள நிலையத்தில் மிகவும் பெறுமதியான சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப் புத்தகத்துடன் தொடர்பான நூல்கள், செய்தி பத்திரிகைகள், கவிதைகள், சஞ்சிகைகள் எனப் பல் துறைசார்ந்த நூல்கள், பழைய முத்திரைகள், நாணயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கல்முனை கல்வி வலயத்தின் கீதம் இசைக்கப்பட்டதுடன் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கடந்த வருடம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்லூரி நூலகத்தால் நடத்தப்பட்ட கட்டுரை, சித்திர போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர்களான எம்.எஸ் மனூனா, என்.டி நதீகா, நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# ஒல்லியாக இருப்பது...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...) பெறுவதற்குப் பல வகை புரத உணவுகளைக் கலந்து சாப்பிட வேண்டும். உதாரணமாக, இட்லி, தோசையைப் பருப்பு சாம்பார் மற்றும் பொரிகடலைச் சட்னி அல்லது தேங்காய்ச் சட்னியுடன் சாப்பிடும்போது, இவற்றில் உள்ள உளுந்து, பாசிப் பருப்பு, துவரம்பருப்பு, பொரிகடலை, தேங்காய் போன்றவற்றிலிருந்து அனைத்து அமினோ அமிலங்களும் கிடைத்துவிடும். இட்லியை சர்க்கரையைத் தொட்டுக்கொண்டோ, இட்லிப் பொடியை மட்டும் தொட்டுக்கொண்டோ சாப்பிட்டால் இந்த அமினோ அமிலங்கள் தேவையான அளவுக்குக் கிடைக்காது.

### உடலை வளர்க்கும் உளுந்து!

சைவ உணவுகளில் உளுந்தம்பருப்பில் புரதம் மிக அதிகம். ஆகவே, உளுந்தால் தயாரிக்கப்படும் உளுந்தங்களி, உளுந்த வடை, ஜிலேபி, இட்லிப் பொடி போன்றவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால், உடல் புஸ்டியாக வளரும். தினமும் ஏதேனும் ஒருவகை பருப்புக் குழம்பு அல்லது பருப்புச் சாம்பார், சிறுகீரை பருப்புக் கூட்டு அவசியம். மாலைச் சிற்றுண்டியில் பொறித்த முந்திரிப் பருப்பு, அவித்த வேர்க்கடலை, கடலைமிட்டாய், எள்ளுருண்டை, சுண்டல், பயறுகள் போன்றவற்றைச் சேர்த்துக்கொள்வது உடலை வளர்க்க உதவும். வாரம் இருமுறை இறைச்சி அல்லது மீன் சாப்பிட வேண்டும். தினமும் அரை லிட்டர் பால் குடிக்க வேண்டும்.

### கொழுப்பும் தேவை!

உடல் தசைகள் பொலிவு பெறுவதற்குச் சிறிதளவு கொழுப்பும் தேவை. இதை நெய், வெண்ணெய், எண்ணெய், தயிர், பனீர், ஆட்டிறைச்சி, முட்டை போன்ற உணவுகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தினமும் இரண்டு முட்டை, சாப்பிடுவது, மதிய உணவின்போது பருப்பில் சிறிதளவு நெய் சேர்த்துக்கொள்வது, தயிர் அல்லது லஸ்ஸி சாப்பிடுவது, மாலையில் இரண்டு வடை அல்லது நான்கு பாதாம் பருப்புகள் சாப்பிடுவது போன்ற உணவுப் பழக்கங்களால் உங்களுக்குத் தேவையான அளவுக்குக் கொழுப்புச் சத்து கிடைத்துவிடும். இவற்றின் மூலம் உடல் மினுமினுப்படையும்.

### இடையிடையேயும் சாப்பிடுங்கள்!

காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை சாப்பிடுவது எல்லோருக்குமான நடைமுறை. ஒல்லியாக இருப்பவர்கள் இந்த மூன்று வேளை உணவுகளோடு இடையிடையேயும் சாப்பிடலாம். சுருக்கமாகச் சொன்னால் மூன்று மணி நேரத்துக்கு ஒருமுறை அளவாகச் சாப்பிடுங்கள். மாவுச்சத்து நிறைந்த சிப்ஸ் போன்ற கிழங்கு வகைகளை இந்த இடைவேளை உணவில் சாப்பிடலாம்.

### ஆரோக்கியப் பானங்கள் அவசியம்!

செயற்கைப் பழச்சாறுகளையும், பாக்கெட்டில் அடைத்த பானங்களையும், காற்றடைத்த குளிர்பானங்களையும் தவிருங்கள். பதிலாக, அப்போதே பிழியப்படும் இயற்கைப் பழச்சாறுகளையும், பால், மில்க் ஷேக் மற்றும் லஸ்ஸி போன்ற பானங்களையும் அருந்துங்கள். புரோட்டீன் பானங்களை அளவோடு எடுத்துக்கொள்ளலாம்.

### உடற்பயிற்சியும் முக்கியம்!

ஒல்லியாக இருப்பவர்களுக்கு உடற்பயிற்சி தேவையா எனக் கேள்வி எழும். இதில் சந்தேகமே வேண்டாம். உடற்பயிற்சி நன்றாக பசி எடுக்க உதவும். அதிக அளவில் சத்துள்ள உணவுகளை உடல் ஏற்றுக கொள்ள வழி செய்யும். கெட்ட கொழுப்பைக் கரைகக்கும். தினமும் அரை மணிநேரம் நடைப்பயிற்சி, மெல்லோட்டம் போன்ற மிதமான பயிற்சிகளைச் செய்தால் போதும். தசைகளுக்கு வலுவூட்டும் 'ஜிம்' பயிற்சிகளையும் செய்யலாம்.

### நொறுங்கத் தின்றால்?

உணவு சாப்பிடுவதும் ஒரு கலை. ஏற்கெனவே உண்ட உணவு செரித்த பின்பு அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும். சுத்தமான உணவு, எளிதில் செரிமானமாகும் உணவு, சுவையான உணவு, சத்துள்ள உணவு, சமச்சீரான உணவு சாப்பிட்டால் நல்லது. சத்துகள் நிரம்பிய உணவை மிதமான வேகத்தில், சரியான அளவில் நன்றாக மென்று, சாப்பிட வேண்டியது முக்கியம். "நொறுங்கத் தின்றால் நூறு வயது" என்று சொல்வார்கள். அதனால் உணவை நன்றாக மென்று சாப்பிடுங்கள். அப்போதுதான் உணவில் உள்ள சத்துகள் முழுவதுமாக உடலில் சேரும். உடல் புஸ்டி அடையும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகல விதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Roty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பாடசாலைக்கு பல் ஊடகக் கருவி வழங்கல்



(எம். எப். றிபாஸ்)

சாய்ந்தமருது கமு ஃலீடர் எம்.எச். எம்.அஷ்ரப் வித்தியாலயத்திற்கு பல் ஊடகக்கருவி வழங்கி வைக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 01 புதிய மாணவர்களை வரவேற்று கற்றல் உபகரணம் வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை முன்னாள் பணிப்பாளரும், மயோன் குரூப் நிறுவனத்தின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா

பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளையேற்று தனது கல்வி உதவித்திட்டத்தின் கீழ் ரிஸ்லி மூலமாக சொந்த நிதியிலிருந்து மல்ரி மீடியாவை வழங்கி வைத்தார்.

கல்முனை வலயக்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான எம்.என்.எம்.ஏ. மலிக், ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம். இஸ்மாயில், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஏ.எம். றிஸ்வான், முன்னாள் பிரதி அதிபர் அப்துல் நிஸார், பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எம். சுஜான், ஆசிரியை, ஆசிரியர்கள் பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உட்பட பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# அகரம் பயில வாசல் நுழையும் வித்தியாரம்ப விழா நிகழ்வு





(யூ.கே. காலித்தீன்)

சாய்ந்தமருது கமு/ஃரியாழுல் ஜன்னாஹ் வித்தியாலயத்தின் வித்தியாரம்பவிழா வியாழக்கிழமை வெகுவிமர்சையாக நடைபெற்றது.

'உலகை வெல்லும் கல்வியைக் கற்கத் தயாராகுவோம்' எனும் கருப்பொருளில் ஆரம்பமான விழாவுக்கு பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான அகர எழுத்தினை எழுதி ஆரம்பித்து வைத்தார். பாடசாலை அதிபர் எம். வி. அஸ்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக கல்முனை கல்வி வலய ஆரம்ப கல்வியின் வளவாலர் எஸ்.எம்.எம். அன்சார் கலந்து கொண்டதோடு, சிறப்பு அதிதிகளாக பாடசாலையின் நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் எம்.ஜி.அஹறத், பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கதின் நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் யூ.கே. காலித்தீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மிகச்சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வுக்காக உழைத்த பிரதி அதிபர், உதவி அதிபர், பாடசாலை ஆசிரியர்குழாம், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களும் மற்றும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதலாம் தர மாணவச் செல்வங்களுக்கு அதிதிகளால் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் சொத்துத்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## நெல்கொள்வனவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் சூரியவளியில் நேற்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது,அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:-

நெல்கொள்வனவு தொடர்பில் நிதியமைச்சே இம்முறை செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது. அதற்காக நிதி அமைச்சு ஒதுக்கீடுகளையும் செய்துள்ளது. சிறிய மற்றும் மத்தியதர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு 9 ஆயிரம் மில்லியன் ரூபாய் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் விவசாயிகளிடத்திலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் இம்முறை நிதியில்லை என்பதைஏற்றுக்கொள்ளவேண்டும். இதன் காரணமாகவே அடுத்த தெரிவுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால்பிரச்சிகைள் காணப்படுகின்றன என்பதை மறுப்பதற்கு இல்லையென்றார்.

## ஜனநாயக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹேக் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் இன்று காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும்.ஃ அதனைத் தொடர்ந்து, வவுனியா கோவில் குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன்நினைவில்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கமும் நடைபெறும்.

பின்னர், முற்பகல் 11 மணிக்கு இறுதி நிகழ்விகள் நடைபெற்று ஆர்.ஆர். இன் வித்துடல் வவுனியா கோவில்குளத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகளுக்கு கைகளை உயர்த்திவிட்டு வீடுகளில் சுதந்திரமாக இருக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகவே தெரியும்.

ஆகவே, நாட்டை விட்டு வெளியேற முடியாமலும், மீண்டும் மக்கள் முன்னிலையில் பிரசன்னமாகமுடியாமலும்இருக்கும் 150உறுப்பினர்களின்ஆதரவினைப் பெற்றுக்கொள்கின்றசெயற்பாடானது இலகுவாக அமையும் என்று நான் நினைக்கவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் செயற்பாடானது தேர்தலை பிற்போடுவதற்கான நோக்கத்தினையே பிரதானமாகக் கொண்டது. அதனை நாடாளுமன்றத்தின் ஊடாகச்செய்வதற்குநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

## அமெ. பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமளித்தார்.

உலக பாதுகாப்பு தொடர்பான விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், செங்கடலில்இடம்பெறும்கடற்படை நடவடிக்கைகளுக்கு இலங்கை வழங்கிய ஆதரவிற்கு பிரதி இராஜாங்க செயலாளர் நன்றி தெரிவித்தார்.

ஹூதி கிளர்ச்சியாளர்கள் தொடர்பில் சவூதி அரேபியாவின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவு தெரிவித்த ஜனாதிபதி, இந்து சமுத்திரத்தின் சுதந்திரமான கடற்பயணத்திற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிக்கும் எனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின்செயலாளர்சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் யூ.எல்.எம். ஜோஹர், சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அமெரிக்க பிரிவின் பணிப்பாளர் சதுர் பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# காற்பந்தாட்ட இறுதிச்சுற்றுக்கு மூதூரில் இரு அணிகள் தேர்வு







(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்டுவரும் பிரதேசவிளையாட்டுவிழாவை முன்னிட்டு நடைபெறும் காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மூதூரிலுள்ள யங்லயன் மற்றும் , கீரோ ஆகிய இரு விளையாட்டுக்கழகங்களும் காற்பந்தாட்ட இறுதிச்சுற்றுக்குத் தெரிவாகியிருப்பதாக மூதூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

மூதூர் பகுதியிலுள்ள 16 விளையாடடுக்களகங்கள் இக் காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றியதாகவும் விளையாட்டு உத்தியோகத்தர் மேலும் கூறினார்.

இறுதிச்சுற்று பிரதேச விளையாட்டு விழாவன்று நடைபெறவுள்ளது .

இப்போட்டி வியாழக்கிழமை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

# சம்மாந்துறையில் பல்லின மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலையில் ஏடு தொடங்கி வைத்தார் எஸ்.சபீஸ்

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை கல்வி வலய கமு/சது/ தாஹிரா வித்தியாலயத்தில் புதிய வருடத்துக்கான ஏடு தொடங்கும் விழா நேற்று (வெள்ளிக்கிழமை) அப் பாடசாலையின் அதிபர் எம்.ஏ. ஆர்.எம். முஸ்தபா தலைமையில் வெகுவிமர்சையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவருமான எஸ்.எம். சபீஸ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஏடு தொடங்கி வைத்தார்.

இப்பாடசாலையில் பல்லின மாணவர்கள் கல்வி பயில்வதோடு அங்குள்ள மாணவர்கள் தமிழ் சிங்கள மொழிகளில் கல்வி கற்பது மாத்திரமல்லாமல் சரளமாக இருமொழிகளிலும் பேசக்கூடியவர்களாக காணப்படுவது சிறப்பம்சமாகும்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி



பணிமனை அதிகாரிகள், சம்மாந்துறை சூரா சபை மற்றும் பள்ளிவாசல்கள் சம்மேளன செயலாளர் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.(05)

# சம்மாந்துறை ஜமாலியா பாடசாலைக்கு பிறிண்டர் உபகரணம் வழங்கி வைப்பு




(தில்சாத் பர்வீஸ்)

'ஒரு குடும்பத்திற்கு, ஒரு படித்தவர்' என உருவாக்கினால் மாத்திரமே ஊரில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களை உயர்த்த முடியும் எனும் நோக்கில் இயங்கி வரும் ' இலவசக் கல்வித் திட்டம் ' மூலம் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் ஊடாக நேற்று(வெள்ளிகிழமை) கமு/சது/ ஜமாலியா வித்தியாலைய சம்மாந்துறை பாடசாலைக்கு தேவையாக கருதப்பட்ட பிறிண்டர், திட்டத்தின் உறுப்பினர்களால் பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கி வைக்கப்பட்டது.(05)

# வருடாந்த தேர்த்திருவிழா

வருடாந்தம் நடைபெறுகின்ற மாசி மக தேர்த்திருவிழா நேற்று(வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் நெத்தலி ஆறு பகுதியில் அமைந்து அடியார்களுக்கு எல்லாம் அருள் பாலித்து வரும் நெத்தடி ஆறு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர் திருவிழா சிறப்புற ஆலய குரு முதல்வர் ஸ்ரீகாந்தன் குருக்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. (05-113)

# தேசிய சாரணர் ஜம்போரி 4ஆவது நாள் நிகழ்வுகள்



(எம். எப். றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் கடந்த இருபதாம் திகதி ஆரம்பிக்கபட்டுள்ள பத்தாவது தேசிய சாரணர் ஜம்போரி எதிர்வரும் திங்கட்கிழமை 26 ஆம் திகதி முடிவடையவுள்ளது.

பிரதம சாரண ஆணையாளர் ஜனப்ரித்பெனாண்டோ தலைமையில் நடைபெற்றுக் கொண்டியிருக்கின்ற இந் நிகழ்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார். சுமார் 12ஆயிரத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சரணர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக ஆறு நாள்கள் நடைபெறவுள்ள இச்சாரணர் ஜம்போரி நிகழ்வில் சாரணர்களின் பலவிதமான பயிற்சி நிகழ்வுகளும், சிநேகபூர்வமான உறவாடல்களும், சகல இன சாரணர்களும் ஒற்றுமையுடன் தங்களது செயற்பாடுகளில் ஈடுபட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்திலிருந்து இருநூறு சாரணர்களுடன் மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமாலெவ்வை, தவிசாளர் யூ. எல். எம். ஹாசிம், உதவி மாவட்ட ஆணையாளர்களன எம்.எப். றிபாஸ், லத்தீப், ஐ. எல். எம்.இப்றாகிம் மற்றும் சாரண ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (05)

# பிரதேச செயலக கணக்காய்வு முகாமைத்துவக்குழுக்கூட்டம்

## வெருகல் பிரதேசத்தில்



(மூதூர் நிருபர்)

வெருகல் பிரதேச செயலகத்தின் பிரதேச கணக்காய்வு முகாமைத்துவக்குழுக்கூட்டம் வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் எம்.எம்.நிசார் மற்றும் ஏ.எல்.மகரூப் ஆகியோர்களும் கலந்துகொண்டதோடு வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நிதி உதவிகள் வழங்கி வைப்பு





(அபு அலா)

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தால் கால்நடைகளை இழந்து பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கான நிதியுதவியை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், ஆளுநர் செயலாளர் எல்.பி. மதநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்துக்கொண்டனர். (05)

# தைக்கா நகர் ஸஹ்ராவில் ஒய்வுபெற்ற ஆசிரியை சனூனாவுக்குக் கௌரவம்!





(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை தைக்கா நகர் ஸஹ்ரா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக 19 வருடங்கள் சேவையாற்றி 32 வருடங்கள் ஆசிரியர் பணி செய்து தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி எஸ்.சனூனாவுக்கான பிரியாவிடை வைபவமும் கௌரவமும் அண்மையில்யில் வித்தியாலயத்தின் திறந்த வெளி அரங்கில் அதிபர் எம். எஸ்.எம்.பைறூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், பழைய மாணவப் பிரதிநிதிகள், தைக்கா நகர் அபிவிருத்தி மன்றத்தினர் குறித்த ஆசிரியருக்கு கௌரவங்களையும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் அதிபரால் ஆசிரியரின் சேவை நலனை பாராட்டி வாழ்த்து பத்திரம் வாசித்து வழங்கப்பட்டதுடன் ஆசிரியர்களால் பொற்கிளியும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# பாவனைக்கு உதவாத உணவுகளை அழிக்க ஏறாவூர் நீதிவான் உத்தரவு

நோய் தொற்றை உண்டாக்கக் கூடிய உணவைக் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்த உணவகங்கள் மற்றும் ஹோட்டல்கள் மீது செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட பாவனைக்குதவாத பெருமளவிலான உணவுப் பொருள்கள், ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணனின் வழிகாட்டலில், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பரமானந்தராசா தலைமையில், மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் திருனவன், பொதுச் சுகாதார பரிசோதகர்களான அமுதமாலன், தீபகுமாரன், கிஷான், சிவகாந்தன், ரவிதர்மா மற்றும் பொது சுகாதார பரிசோதக மாணவர்கள் இணைந்து கடந்த வியாழக்கிழமை ஏறாவூர் பிரதேசத்தில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் உணவகங்கள், வெதுப்பகங்கள் உள்ளிட்ட சிற்றுண்டிச்சாலைகளில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்தச் சோதனைகளின் போது மனித பாவனைக்கு உதவாத, நோய் தொற்றை உண்டாக்கக் கூடிய வகையில் களஞ்சியப்படுத்தியிருந்த பெருமளவிலான உணவுப் பொருள்கள் சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுடன், குறித்த பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள், ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அழிக்கப்பட்டன.

அத்துடன் 04 பேருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டதுடன், அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டவர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றால் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

மேலும் இந்தச் சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட ஏனைய உணவகங்களுக்கு எதிராகவும் எதிர்வரும் 26.02.2024 ஆம் திகதியன்று வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (05)

# குவைத் தூதருடன் தௌபீக் சந்திப்பு



(கே எ ஹமீட்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் மற்றும் குவைத் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாஃப் எம்.எம். பூ தாஹீர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

குவைத்திற்கும் இலங்கைக்குமான நீண்டகால உறவு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் இச்சந்திப்பின் போது நினைவுபடுத்தியதுடன் கடந்த காலங்களில் எமது நாட்டு மக்களுக்கு உதவியதற்காக தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

மேலும், திருகோணமலை மாவட்ட மக்களின் வாழ்வாதார நிலைப்பாடு, கல்வித் தேவைகள் மற்றும் மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தூதுவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், வெளிநாட்டு வேலைவாவாய்ப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் அல் - ஹிக்மா பவுண்டேசன் தலைவர் இபாதுல்லா ஹ் மௌலவியும் கலந்து கொண்டார். (05)

# பிரபல அறிஞர் அஷ்ஷெய்க் ஆதில் ஹசன் கலந்துகொள்ளும் விசேட பயான் நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் எதிர்வரும் புனித ரமழானை முன்னிட்டு, பிரபல மார்க்க அறிஞர் அஷ்ஷெய்க் ஆதில் ஹசன் உட்பட உலமாக்கள் கலந்து கொள்ளும் விசேட பயான் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி முதல் இரவு 9.30 மணி வரை சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

சாய்ந்தமருது ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில், அல்-குர்ஆன், ஸ/ன்னா வழிகாட்டலில் ஓர் இஸ்லாமிய குடும்பம் எனும் தலைப்பில் பிரபல மார்க்க அறிஞர்

அஷ்ஷெய்க் ஆதில் ஹஸன் கலந்து கொண்டு விசேட உரையாற்றுவதோடு, இன்றைய நவீன உலகில் இளைஞர்கள் எதிர் நோக்கும் சவால்கள் எனும் தலைப்பில் அஷ்ஷெய்க் எம்.என்.எம். கிஸ்லி (தௌஹீதி), றமழானை அமல்களைக் கொண்டு அலங்கரிப்போம் எனும் தலைப்பில் அஷ்ஷெய்க் எம்.எம். அஹ்ஸன் (ஸஹ்வி) ஆகியோரும் இதன்போது உரை நிகழ்த்தினர். (05)

# வலி.வடக்கிலுள்ள 21 ஆலயங்களில் 34 வருடங்களின் பின் வழிபாடுகள்

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆலயங்களில் சுமார் 34 வருடங்களின் பின்னர் பொதுமக்கள் கடந்த செள்ளிக்கிழமை நேரடியாக வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதற்கமைவாக வழிபாடுகளை மேற்கொள்ள 290 பக்தர்கள் தமது பெயர் விவரங்களை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்து வழிபாடியற்றினர்.

வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 21 ஆலயங்களில் பலாலி வடக்கு ஜே/254 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அம்மன் கோவில் , நாகதம்பிரான் அம்மன் கோவில் ஜே/238 கிராம அலுவலர் பிரிவில் உள்ள முத்துமாரி அம்மன் கோவில் ,ஜே/245 வசாவிளான் மேற்கு.கிராம அலுவலர் பிரிவில் உள்ள மனாம்பிராய் பிள்ளையார் கோவில், சிவன் கோவில் , நாகதம்பிரான் கோவில், சக்தியுடையாள் அம்மன் கோவில் ஆகிய ஏழு ஆலயங்களை தரிசிப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றிருந்த நிலையில் 5 ஆலயங்களை தரிசிக்க 290 பேர் தமது பெயர் விவரங்களை சமர்பித்தனர்.

வெள்ளி காலை 9 மணிமுதல் பலாலி இராணுவ தலைமையகத்தின் பிரதான நுழைவாயில் ஊடாக ஆலயத்தைத் தரிசிப்பதற்கு வருகை தரும் பக்தர்கள் இராணுவத்தினரின் பஸ் மூலம் ஆலயங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை இலத்திரனியல் உபகரணங்கள்,தொலைபேசிகள் என்பன இராணுவத்தினரால் பெறப்பட்டு இலக்கமிடபட்டு இலக்கமொன்று வழங்கப்பட்டது. வழிபாடுகளின் பின்னர் மீள வெளியே வருகின்ற பொழுது குறித்த உபகரணங்கள் வழங்கப்பட்டது. பூசைப் பொருள்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதே வேளை கடந்த மாதம் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தலைமையிலான மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு கூட்டத்தில் காணி விடுவிப்பு தொடர்பாக பேசப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 14ஆம் திகதி யாழ். மாவட்ட செயலர், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், மாவட்ட செயலக அதிகாரிகள், தெல்லிப்பழை பிரதேச செயலர் , யாழ் மாவட்ட இராணுவ தளபதி ஆகியோருக்கி டையில் பலாலி இராணுவ தலைமை அலுவலகத்தில் கூட்டம் இடம்பெற்றது. மேலும் வழிபாட்டு தலங்களை புனர்நிர்மாணம் அல்லது புனரமைப்பு பணிகள் செய்வதற்கு அனுமதிகள் வழங்கப்படவில்லை என இராணுவம் குறிப்பிட்டுள்ள போதிலும் ஆலயத்தினர் விரும்பினால் முறையான கோரிக்கையினை மாவட்ட செயலகத்திடம் முன் வைப்பதன் மூலம் இராணவத்தினர் மூலம் ஆலயங்களை புனர்நிர்மாணம் செய்யமுடியும் என யாழ் மாவட்ட செயலர் அம்பலவானர் சிவபாலசுந்தரன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## கணேசாவில் கால்கோள் விழா



( வி.ரி. சகாதேவராஜா)

நாவிதன்வெளி கணேசா வித்தியாலயத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான தரம்-1 இற்கு புதிய மாணவர்களை உள்வாங்கும் வித்தியாரம்ப நிகழ்வு புதிதாகக் கடமையேற்றுள்ள அதிபர் திருமதி கா.துரைலிங்கம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன் போது அதிபர் ஆசிரியர்கள், மாணவர்களால் பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டார்.

விழாவில் பிரதம அதிதியாக வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் .சி.பிரதீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் அப்பாடசாலையில் தரம்-9வரை கற்று தரம்-10 இற்கு ஏனைய பாடசாலைக்கு கற்கச் செல்லும் மாணவர்களை வழியனுப்பும் நிகழ்வும் நடைபெற்றது. (05)

## சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியில் வித்தியாரம்ப விழா



(எஸ்.அஷ்ரப்கான்,அகமட் எஸ். முகைடீன்)

சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியாலயத்தின் வித்தியாரம்ப விழா கல்லூரி முதல்வர் அஷ்ஷேஹ் எம்.ஐ.எம் கலீல் (நழீமி) தலைமையில் கடந்த வியாழக்கிழமை பாடசாலையில் அமைக்கப்பட்ட வெளியக அரங்கில் மிகக்கோலாகலமாக நடைபெற்றது.

இப்பாடசாலையில் 2024 ஆம் கல்வி ஆண்டில் தரம் 1 இற்கு புதிய அனுமதிக்கப்பட்ட மாணவர்களை மகிழ்ச்சிகரமாக வரவேற்கும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் வைத்தியர் எஸ். எம்.எம். செய்யத் உமர் மௌலான, கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் ஏ.எல். அப்துல் மஜீட் ஆகியோரும் பாடசாலையின் பிரதி அதிபர்களான திருமதி எஸ்.எஸ்.ஏ.சலீம், எஸ்.எம்.எம்.சஜீர், உதவி அதிபர் திருமதி எச்.எஸ்.றுக்சானா பர்வின் மற்றும் ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது தரம் 2 மாணவர்களால் தரம் 1 மாணவர்கள் வரவேற்கப்பட்டோடு அதிதிகளால் தரம் 1 மாணவர்களுக்கு கிரீடம் மற்றும் நினைவுப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மௌலவி றம்சின் (காசிபி) அவர்களால் மாணவர்களின் கல்வி விருத்திக்கான துஆ பிரார்த்தனையுடன் அகரம் எழுதும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் இதன்போது காவியத்தை ஓவியமாக்கி ஓவியத்துடன் நடனமாடும் நிகழ்வு மற்றும் சமூக வலைத்தளங்களின் பிடியில் சிக்காது சரித்திரம் படைத்தல் எனும் தொனிப்பொருளில் அமைந்த விழிப்புணர்வு நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன.

சிறிய அளவிலான வளாகத்திற்குள் இயங்கும் இப்பாடசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் மெச்சத்தக்க வகையில் முன்மாதிரி மிக்கதாக அமைந்துள்ளதைப் பாராட்டுவதாக இதன்போது உரையாற்றிய வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்து நிகழ்வைச் சிறப்பித்த சம்மாந்துறை வலையக்கல்விப் பணிப்பாளருக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பெற்றோருடன் பாடசாலைச் சமூகம் மிக நெருக்கம் கொண்டு செயற்படுவதன் விளைவாய் இப்பாடசாலையின் பெற்றோர் ஒருவர் தாமாகவே முன்வந்து ஒரு தொகுதி மாணவர் கதிரை, மேசை என்பவற்றை இதன்போது அன்பளிப்பாக வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

## அம்பாறை மாவட்டத்திற்கு நீதி அமைச்சர் வருகை

(கே எ ஹமீட்)

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ அம்பாறை மாவட்டத்திற்கான இரண்டு நாள் பயணமாக வந்திருந்தார். .

இந்தப் பயணத்தின்போது தீகவாபி ரஜமஹா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

ஆளும் தரப்பர் மேற்கொள்ளப்பட்டுவரும் இன நல்லிணக்கம் தொடர்பான வேலைத்திட்டத்தை மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பிக்கவிருப்பதாக இந்த விஜயத்தின் போது குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜெயரத்னவும் கலந்துகொண்டதுடன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.ஜெகதீசன், அட்டாளச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபிர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.(05)

## கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வித்தியாரம்ப விழா!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2024 ஆம் கல்வி ஆண்டுக்காக புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களுக்கான வித்தியாரம்ப விழா கடந்த வியாழக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பகுதித் தலைவர் டி.கே.எம். மௌஸீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம் றிசாத் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை சபா கோல்ஹவுஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் எப். எம். சகி, 'டே நைட் பென்சிஹவுஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எம். சிறாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் அதிதிகளால் அம் மாணவர்களுக்கு கிரீடம் அணிவிக்கப்பட்டதுடன் இனிப்புப் பொதிகளும் வழங்கி, ஏடு தொடக்கி வைத்தும் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் வருகை தந்த கௌரவ அதிதிகளால் புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ரீ.ஏ. மனாப் மற்றும் பாடசாலையின் பகுதித்தலைவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு பற்சிகிச்சை முகாம் கல்முனையில்







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஆண்டுதோறும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி உலக வாய் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதனை முன்னிட்டு அதற்கு முன் உள்ள மாதத்தையும் பின்னுள்ள மாதத்தையும் தேசிய வாய் சுகாதார விழிப்புணர்வு மாதங்களாக பிரகடனப்படுத்தி பல்வேறு வேலை திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இலங்கை பற்சிகிச்சை சங்கத்தோடு இணைந்து 'மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல்' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த பற்சிகிச்சை மருத்துவ முகாம் மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு என்பன நேற்று(வெள்ளிக்கிழமை) பெரியநீலாவணை ஆயுர்வேத வைத்தியசாலையில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.சறூக் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்கு வாய் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டதுடன் மருத்துவ முகாமில் வாய் சுகாதாரம் பரிசோதனை செய்யப்பட்டு தேவையான பற்சிகிச்சைகளும் இங்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், இலங்கை பற்சிகிச்சை சங்கத்தின் கிழக்கு பிராந்திய தவிசாளர் வைத்தியர் கேதீஸன் உட்பட பல் வைத்திய அதிகாரிகள் , பிராந்திய சுகாதார பணிமனையின் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05)

## காட்டு யானைகளின் தாக்கங்களை தடுப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது குறித்து ஆராய்வு





(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்கங்களால் பயிர்கள், சொத்துக்கள், உடைமைகள் மற்றும் தொழில் நிலையங்கள் போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் காயமடைதல், உயிராபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான முன்னாயத்தத் திட்டத்தை வெற்றிகரமான தாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், வனஜீவராசிகள் திணைக்களத்தின் வளத்தாப்பிட்டி அலுவலக பொறுப்பதிகாரி, நீர்ப்பாசன திணைக்கள உத்த ி யோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், காரைதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ இளைஞர் குழுவின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர் .(05)

## தமிழ் இலக்கியம் இலக்கணம் தொடர்பான செயலமர்வுகள்

(கிண்ணியா நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய தமிழ் பேசும் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கான செயலமர்வொன்று பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற குறித்த செயலமர்வை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட இலக்கியப் போட்டியினை முன்னிட்டு, தமிழ்மொழி மூலமான மாணவர்களுக்கான தமிழ் இலக்கண இலக்கியம் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவர்களின் மொழி ஆளுமை, தமிழ் இலக்கண உச்சரிப்பு, கட்டுரை ஆக்கம் எழுதுதல் உள்ளிட்ட பல திறன்களை வளர்க்கவும் இச் செயலமர்வின் மூலமான வெளிப்பாடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் வளவாளராக தமிழ் கற்கைகள் துறை மாணவன், கிழக்குப்பல்கலைக்கழகம் தி. முகிலன் அவர்கள் கலந்துகொண்டார்.

இச் செயலமர்வின் ஒருங்கிணைப்பாளராக திருமதி பாக்கியராஜா மேனகா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தம்பலகாமம்) உட்பட மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர். (05)



# அன்று நீதிமன்றமாக விளங்கிய ஆலயங்கள் இன்று நீதிமன்றில்!

## அம்பாறை மாவட்ட மேலதிக செயலர் ஜெகதீசன் கவலை

( காரைதீவு சகா)

அன்றையகாலகட்டத்தில் ஆலயங்கள் சமூகத்தை வழிநடத்தும் நீதிமன்றமாகவும் விளங்கியது. ஆனால் இன்று நிர்வாக சிக்கலில் மாட்டி பல ஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. இது தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறு மடத்தடி மீனாட்சி அம்மனாலய விசேட நிர்வாக சபை கூட்டத்தில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கவலை தெரிவித்தார்.

நிந்தவூர் மாட்டுப்பழை மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய விசேட நிருவாக சபைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை ஆலய பரிபாலன சபையின் தலைவர் கே.ஜெயசிறில் தலைமையில் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்றது .

அங்கு அரசஅதிபர் மேலும் கூறுகையில் -

அம்பாறை மாவட்டத்தில் இன்று 21 ஆலயங்கள் நீதிமன்றத்தில் நிற்கின்றன. பணம் நேரம் என்பன வீணாக விரயமாகின்றன. உகந்தமலை முருகன் ஆலயமும் நீதிமன்றில் உள்ளதை அறிவீர்கள். அதனால் லாகுகலை பிரதேச செயலாளர் வசம்



அவ் ஆலயம் பரிபாலிக்கப்படுகிறது.

விசேட அமைவிடம் பொருந்திய இவ் ஆலயம் மிகவும் பலத்த சவால்களுக்கு மத்தியில் கும்பாபிஷேகம் கண்டு புதுப்பொலிவு பெற்று வருகிறது. அதற்காக இந்த ஆலய நிர்வாக சபையை பாராட்டுகின்றேன். அதேவேளை இங்குள்ள நிர்வாக நடவடிக்கைகள் சீரமைக்கப்பட வேண்டும் .அந்த ரீதியிலே இந்த கூட்டம் இடம்பெறுகின்றது. என்றார்.

கூட்டத்தில் ஆலய பரிபாலன சபையின் ஆலோசகர்களான வி.ரி.சகாதேவராஜா, வா.குணாளன், வி.ஜயந்தன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி, நிந்தவூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். அவர்கள் முன்னிலையில் விசேட கூட்டம் இடம்பெற்றது. எதிர்வரும் 16ஆம் திகதி சங்காபிஷேகம் இடம்பெற இருக்கின்றது. அவ்வேளையில் ஆலய வரலாற்று நூலான ' 'மரகதம் 'என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது எனத் தலைவர் கூறினார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.02.2024இல் வெளியிடப்பெற்றது.